சிசி **232/2018.** அசா**.5** நாகராஜன் **,** த.பெ சின்னகண்ணு **,** தேதி **07.07.2023**

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை தான் போலீசர் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். விபத்தில் இறந்துபோன பாலமுருகன் எனக்கு சித்தப்பா மகன் ஆவார். விபத்து தொடர்பாக போலீசார் என்னை புதுக்கோட்டை அரசு மருத்துவகல்லுரி மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தனர். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் நான் கேள்விப்பட்ட விதத்தில் விபத்து நடக்கவில்லை என்றாலும் இருசக்கர வாகனத்தில் சென்ற பாலமுருகன் ஆகியோர் தங்களது வாகனத்தினை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டிசென்று விபத்தினை ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல.